தி.மு.க. மாணவர்அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (இரண்டாவது பட்டியல்)

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திண்டுக்கல் கிழக்குமாவட்டம்

அமைப்பாளர் : **கி.பிரபாகரன்,** நெ.6/116, மாரியம்மன் கோவில் தெரு, ஆத்தூர் அஞ்சல், திண்டுக்கல் - 624 701.

துணைஅமைப்பாளர்கள் : ச. சூசைராபர்ட், எம்.ஏ., பி.எல்., நெ.30/124, அமுல் இல்லம், தெற்கு தெரு, முத்தழகுபட்டி, திண்டுக்கல். மு. முத்துக்குமார், டி.பி.இ., நெ.17ஏ, போலியம்மனூர், நீலமலைகோட்டை, திண்டுக்கல் மேற்கு வட்டம். நா. துரைப்பாண்டி, எம்.பி.ஏ., பி.எல்., நெ.10729, பட்டுநூல்காரர் தெரு, வத்தலக்குண்டு, நிலக்கோட்டை வட்டம். மு. பாஸ்கரன், டி. காப்., மேற்குதெரு, சங்காரெட்டிகோட்டை, பட்டிவீரன்பட்டி அஞ்சல், ஆத்தூர் வட்டம். ப. முத்துலட்சுமி, எம்.ஏ., எம்.பில்., 1வது வார்டு, மேற்குத் தெரு, குறும்பட்டி, பாலசமுத்திரம், பழனி வட்டம்.

சேலம் மேற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **அ.கண்ணன்,** பி.காம்., நெ.2/2081, பஞ்சாயத்து ஆபீஸ் எதிரில், சுப்ரமணியர் கோயில் வீதி, மகுடஞ்சாவடி அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் - 637 103.

துணைஅமைப்பாளர்கள் : சு. லூயிஸ் கிருஷ்ணன், எம்.இ., நெ.2பி10ஏ, பெரியார் நகர், மேட்டூர் அணை, சேலம் மாவட்டம் - 636 401. பெ. கருணாகரன், எம்.எஸ்.சி., எம்.பில்., பி.எட்., நெ.1/161, கலர்பட்டி, எடையப்பட்டி கிராமம், இராமிரெட்டிபட்டி அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் - 636 501. பி. சதாசிவம், டி.எம்.இ., நெ.1247, நவப்பட்டி, மாதையன்குட்டை, கொளத்தூர், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் - 636 452. சி. உத்திரகுமார், டி.எம்.இ., நெ.17/169, வடக்குத் தெரு, இடங்கணசாலை நகராட்சி, இடங்கணசாலை அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் - 637 502. கே. வைஷ்ணவி, பி.ஏ., பி.பி.எட்., நெ.76, பழைய தெரு, வெள்ளாண்டி வலசு, எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் - 637 101.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் : **இ.எஸ்.டி. கார்த்திகேயன்,** பி.இ., எம்.பி.ஏ., எரமலூர் கிராமம், நல்லூர் அஞ்சல், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை.

துணைஅமைப்பாளர்கள் : கே.வி.ஆர். சுரேஷ்பாபு, டி.சி.டி., நெ.2/என்3, கம்பர் தெரு, வசந்தம் நகர், போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 606 803. கோ. மணிபாரதி, பி.சி.ஏ., பி.எல்., பூங்கொல்லைமேடு கிராமம், பெரியகரம், போளூர் & வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். ப. தமிழரசன், பி.ஏ., நெ.2/5, மாரியம்மன்கோயில்தெரு, வடதின்னலூர்கிராமம்&அஞ்சல், செய்யார்தாலுக்கா, திருவண்ணாமலை. ஷேக். ஷர்புதீன், பி.பி.ஏ., நெ.137, நெமந்தகாரத் தெரு, வந்தவாசி டவுன், திருவண்ணாமலை மாவட்டம். இ.வெ. கீர்த்தனா, எம்.சி.ஏ., நெ.6, முத்துமாரி அம்மன் கோவில் தெரு, ராமகிருஷ்ணா பேட்டை, ஆரணி - 632 301.

தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **ரா. அருண்குமார்,** பி.காம்., நெ.2/22, தெற்கு தெரு, கோரம்பள்ளம், தூத்துக்குடி - 628 101.

துணைஅமைப்பாளர்கள் : க. பிரவின், பி.காம்., நெ.1/21, வடக்குத் தெரு, அடைக்கலாபுரம், தூத்துக்குடி - 628 217. ஜெ. காட்வின் ராஜா, பி.காம்., நெ.4/6, தேவர் தெரு, பழையகாயல், தூத்துக்குடி - 628 152. மு. பிரஷாந்த், டி.ஏ.இ., நெ.4/128, ஸ்டேட் பேங்க் காலனி, சங்கரப்பேரி, தூத்துக்குடி - 628 002. க. தங்கமாரிமுத்து, எம்.ஏ., பி.எல்., நெ.13/59, தாளமுத்து நகர், சிலுவைப்பட்டி, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி - 628 002.

கோவை தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **சூலூர் ஆர். பிரபு,** பி.பி.ஏ., குப்பநாயக்கர் வீதி, மார்க்கெட் ரோடு, சூலூர், கோவை - 641 402.

துணைஅமைப்பாளர்கள் : பி. பூரணசந்திரன், பி.இ., எல்.எல்.பி., நெ.2/24, பள்ளி வீதி, நஞ்சகவுண்டபுதூர், ஆச்சிப்பட்டி, பொள்ளாச்சி. சு. தண்டாயுதபாணி, எம்.பி.ஏ., நெ.1/154, தியாகிகள் வீதி, சின்னியம்பாளையம், கோயம்புத்தூர் - 641 062. த. விக்னேஷ், டி.எம்.இ., நெ.1/278, பழனிச்சாமி நகர், மலுமச்சம்பட்டி, கோயம்புத்தூர் - 641 050. பெ. அரவிந்த் வசந்த்ராம், எம்.எஸ்.சி., நெ.17/6, எஸ்.டி.எஸ். புரம், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி. எம். புனிதவதி, பி.காம்., எல்.எல்.எம்., நெ.1/244, விநாயகர் கோவில் வீதி, சுப்பேகவுண்டன்புதூர், பொள்ளாச்சி - 642 103.

தஞ்சை தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **ரா.பாலமணிகண்டன்,** பி.எஸ்.சி., எம்.பி.ஏ., தம்பிக்கோட்டை வடகாடு - 614 704, பட்டுக்கோட்டை வட்டம்.

துணைஅமைப்பாளர்கள் : ஜி.வி. விக்னேஷ், பி.இ., மழவேனிற்காடு - 614 701, பட்டுக்கோட்டை வட்டம். அ. கண்ணதாசன், பி.ஏ., கீழத்தெரு, ஆத்திக்கோட்டை - 614 906, பட்டுக்கோட்டை வட்டம். கா.சு. கார்த்திகேயன், ஐ.சி.இ., நெ.726, கீழக்காடு, தாமரங்கோட்டை - 614 613. கே. மாணிக்க வாசகம், பி.இ., நெ.12ஏ, தெற்குத் தெரு, பேராவூரணி, பேராவூரணி அஞ்சல் (ம) தாலுக்கா, தஞ்சாவூர். த. சுகந்தி, பி.இ., தெற்கு தெரு, ஆவிக்கோட்டை, கீழக்குறிச்சி அஞ்சல், பட்டுக்கோட்டை - 614 015.

விருதுநகர் தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **செ. வேல்முருகன்,** எம்.ஏ., நெ.54, ஞானசம்மந்தர் தெரு, சம்மந்தபுரம் - 626 117, விருதுநகர்.

துணைஅமைப்பாளர்கள் : ஆ. ராஜ்குமார், பி.பி.ஏ., நெ.7, இராமகிருஷ்ணாபுரம் - 626 141, விருதுநகர். மா. துரை முருகன், பி.ஏ., நெ.2/120, கிழக்குத் தெரு, கே.மேட்டுப்பட்டி - 626 202, விருதுநகர். வி.பி.துரைகற்பகராஜ், பி.இ., எம்.பி.ஏ., நெ.டி4/3361, திருநகர், செண்பகத்தோப்பு ரோடு, இராஜபாளையம் - 626 117, விருதுநகர். க. பொன்னுப்பாண்டி, எம்.காம்., நெ.2/314, மேற்குத் தெரு, வில்லிபத்திரி - 626 109, விருதுநகர். ச. சரண்யா, பி.இ., நெ.3/8063, தென்றல் நகர், சாத்தூர் - 626 203, விருதுநகர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **ஏ. முரளி சேனா,** பி.லிட்., நெ.1042, பாரதி நகர், அத்திமாஞ்சேரிப்பேட்டை, பள்ளிப்பட்டு, திருவள்ளூர்.

துணைஅமைப்பாளர்கள் : எம்.எம். லிங்கேஷ்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.பி., நெ.5பி, எல்லையம்மன் கோவில் தெரு, திருப்பாச்சூர், திருவள்ளூர். கு. பிரபாகரன், எம்.ஏ., நெ.28/59, முகமது அலி தெரு, திருவள்ளூர் - 602 001. ம. கோபிநாத், பி.எஸ்.சி., எம்.ஏ., நெ.4/23பி, அண்ணா தெரு, வெண்மனம்புதூர், கடம்புத்தூர், திருவள்ளூர். மு. எழிலரசன், பி.லிட்., பி.எட்., நெ.188, ஒத்தவாடை தெரு, இராமஞ்சேரி, திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர். சா. அர்ச்சனா, பி.காம்., நெ.39, லங்கா காரா தெரு, திருவள்ளூர் - 602 001.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் : **ஆ. வெற்றி (எ) ராஜேஷ்,** எம்.பி.ஏ., நெ.26, பிள்ளையார் கோயில் தெரு, கிளிக்கோடி கிராமம் & அஞ்சல், பொன்னேரி வட்டம் - 601 206, திருவள்ளூர்.

துணைஅமைப்பாளர்கள் : டி.ஜெ.ஜி. தமிழரசன், நெ.175, டி.ஜெ.எஸ். காம்ப்ளக்ஸ், ஜி.என்.டி. சாலை, கவரைப்பேட்டை - கும்மிடிப்பூண்டி வட்டம் - 601 206. த. தமிழழகன், பி.இ., எல்.எல்.பி., நெ.2, பாரதியார் தெரு, பொன்னேரி வட்டம், ஆரணி - 601 101, திருவள்ளூர். எஸ். சேதுராமன், எம்.எஸ்.சி., எம்.ஏ., எல்.எல்.பி., நெ.91, பெருமாள் கோயில் தெரு, காட்டுப்பள்ளி கிராமம் & அஞ்சல், பொன்னேரி வட்டம். உ. விக்னேஷ் உதயன், பி.எஸ்.சி., எம்.ஏ., எம்.பில்., பி.எல்., நெ.225/2, வள்ளலார் தெரு, பாலமுருகன் நகர், டி.வி.புரம், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம் - 601 204. பி. தனலட்சுமி, பி.இ., ஆர்.என். கண்டிகை கிராமம், ஆரணி அஞ்சல், கும்மிடிப்பூண்டி வட்டம் - 601 101.

மதுரை மாநகர் மாவட்டம்

அமைப்பாளர் : **டி. துரை கோபால்சாமி,** பி.இ., நெ.4, தியாகராஜர் காலனி, மதுரை - 4.

துணைஅமைப்பாளர்கள் : சி. திருப்பதி, பி.சி.ஏ., எல்.எல்.பி., நெ.17/31, ஜார்ஜ் ஜோசப் தெரு, காமராஜபுரம், மதுரை - 9. எம்.எஸ். மதன் மோகன், டி.எப். டெக்., நெ.1ஏ, ஞானம் பல் கிளினிக் முதல் தளம், கூடல் நகர், மதுரை - 625 018. ஜி. சந்துரு, பி.இ., எம்.பி.ஏ., எல்.எல்.பி., நெ.110, சிவகாமி தெரு, செல்லூர், மதுரை - 2. பி. அரிசங்கர், பி.இ., எம்.பி.ஏ., நெ.நெ.1/12சி, பி.எஸ். இல்லம், பாக்கியலெட்சுமி நகர், கோவில்பாப்பகுடி, மதுரை - 18. பி. நித்ய தர்ஷினி, பி.எஸ்.சி., நெ.2/232, கோவில் பாப்பாகுடி ஏடி காலனி தெரு, பொதும்பு அஞ்சல், மதுரை - 625 018.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் : **கே. ஜெயேந்திரன்,** பி.பி.ஏ., நெ.1/113, கொத்தபேட்டா, வெங்கடாபுரம், பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள் : கே.எஸ். கௌதம், பி.இ., எம்.பி.ஏ., நெ.2/307, குள்ளனூர் கிராமம், போச்சம்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம். த. ராமச்சந்திரன், ஐ.டி.ஐ. நெ.1/82, போகனப்பள்ளி, பெத்தனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம். எஸ். ஹரிஹரன், எம்.எஸ்.சி., பி.எட்., எம்.பில்., நெ.40, கோள்ளப்பட்டி, சாலமரத்துப்பட்டி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி மாவட்டம். சி.வி. மணிபாரதி, பி.காம்., எம்.பி.ஏ., நெ.104/41, காந்தி பஜார், மெயின் ரோடு, பர்கூர், கிருஷ்ணகிரி. ப. உமாவதி, பி.எட்., சென்னை சாலை, கவுண்டர் டிபன் சென்டர், காந்திக்குப்பம் அஞ்சல், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் : **சை. சையத் நிஜாம்,** பி.ஏ., மேட்டு தெரு, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள் : க. பார்த்திபன், பி.இ., எல்.எல்.பி., மதியனூர் மற்றும் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். இரா. கதிரவன், பி.இ., காட்டுசெல்லூர், மேமாலூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். ஏ. மணிகண்டன், பி.இ., கீழக்குப்பம், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். கு. குருராஜ், எம்.எஸ்.சி., நெ.14, பெருமாள் கோவில் தெரு, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606 107. பொன்னி அண்ணாமலை, பி.இ., நெ.2/12, மெயின் ரோடு, கிடகுடையாம்பட்டு கிராமம், ஆரூர் அஞ்சல், சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 606 402.

தருமபுரி கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் : **என்.பி. பெரியண்ணன்,** எம்.ஏ., எம்.எட்., நெ.1/121, நத்தஅள்ளிகிராமம்&அஞ்சல், இண்டூர்வழி, நல்லம்பள்ளிவட்டம், தருமபுரிமாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள் : கே. கௌதம்,எம்.ஏ., பி.எட்., நெ.5/1480, சேலம்மெயின்ரோடு, இலக்கியம்பட்டிஅஞ்சல், தருமபுரி. கே. அன்பரசு, டி.எம்.இ., ஜாகிர்வரகூர்கிராமம், புலிக்கரைஅஞ்சல், பாலக்கோடுவட்டம், தருமபுரி. எம். வேடியப்பன், எம்.ஏ., பிக்கம்பட்டிஅஞ்சல், பென்னாகரம்தாலுக்கா, தருமபுரி - 636 813. ஆர்.பி. முத்தமிழன், டி.சி.இ., நெ.1/29, புதியகாலனி, நல்லம்பள்ளி, தருமபுரி. எம். ஆயிஷாஜாஸ்மின், எம்.ஏ., பி.எட்., நெ.3/2, இஸ்மாயில்ரோடு, தருமபுரி.

அரியலூர் மாவட்டம்

அமைப்பாளர் : **எஸ்.ஆர். இராமராஜன்,** பி.எஸ்.சி., பி.எட்., மெயின் ரோடு, சத்திரம், இளையபெருமாள்நல்லூர், உடையார்பாளையம் வட்டம்.

துணைஅமைப்பாளர்கள் : இரா. ரமேஷ், டி.சி.இ., பருக்கல், உடையார்பாளையம் வட்டம். செல்வ. பிரபாகரன், பி.டெக்., பி.எல்., திருமானூர், அரியலூர் மாவட்டம். சீ. சுரேஷ், பி.எட்., எம்.பில்., மாந்தோப்பு தெரு, வி.ரோடு, ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் வட்டம். ரெ. வெங்கட்ராமன், டி.எம்.இ., நெ.32/122, தெற்கு தெரு, உடையார்பாளையம், உடையார்பாளையம் வட்டம். மு. முத்தழிகி, எம்.எஸ்.சி., வல்லம், ஆண்டிமடம் வட்டம்.

சென்னை மேற்கு மாவட்டம்

அமைப்பாளர் : **வி.ஆர். விஜய்,** டி.சி.இ., பி.ஆர்க்., தீபிகா நளினி, எண்.38, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

துணைஅமைப்பாளர்கள் : பி.ஜே. ஓம் குமார், பி.டெக்., எம்.பி.ஏ., எல்.எல்.பி., பழைய எண்.5, புதிய எண்.9, 4வது குறுக்கு தெரு, மேற்கு சௌராய் நகர், சென்னை - 600 030. முனைவர் கெ. ஜெகதீசன், எம்.எஸ்.சி., பி.எட்., எம்.பில்., பி.எச்.டி.,நெ.2ஏ/82,இருசப்பா2வதுசந்து,திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. அ. கார்த்திக், டி.சி.இ., எண்.249/7, பி. பிளாக், எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், சென்னை - 600 106. பிரசன்ன ராஜகுமாரி, பி.டெக்., எண்.543, டி பிளாக், திரு.வி.க. குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. எஸ். கார்த்திக், டி.சி.இ., நெ.15/31, கிருஷ்ணன் செட்டி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

"அண்ணா அறிவாலயம்" சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.,
சென்னை - 18. செயலாளர்
நாள் : 03-08-2023 தி.மு.க. மாணவர் அணி

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.ஆய்வின் போது தமிழ்நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியகம் காப்பாட்சியர், சி.சிவகுமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தமிழகத்தின் நன் முத்துக்களைத் தேர்ந்தெடுத்த முதல்வர்!

தமிழ்நாட்டிற்கும் இனத்திற்கும் பங்காற்றிய மாமனிதர்களுக்கு 'தகைசால் தமிழர் விருது!'

'தினத்தந்தி' நாளேடு புகழாரம்!

சென்னை, ஆக. 6-

தமிழகத்தின் நன் முத்துக்களை தேர்ந்தெடுத்து தமிழ் நாட்டிற்கும், தமிழ் இனத்திற்கும் பங்காற்றிய மாமனிதர்களுக்கு 'தகைசால் தமிழர்' விருதுகளை வழங்கி கௌரவிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 'தினத்தந்தி' நாளேடு தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து புகழாரம் சூட்டியுள்ளது.

அது வருமாறு:-

இந்த ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருது, திராவிடர் கழக தலைவரான 90 வயது கி.வீரமணிக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழ் இனத்தின் மேன்மைக்கும் பாடுபட்டவர்களை தாய்த் தமிழ்நாடு சரித்திர காலம் தொட்டே மறப்பதில்லை.

அந்த வகையில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பை ஏற்றது முதல், இதுபோன்ற சமூக நலனுக்காக பங்காற்றியவர்களுக்கு உரிய கவுரவத்தை அளித்துவருகிறார்.

அவர் ஆட்சி பொறுப்பை ஏற்ற தொடக்கத்தில், 18.7.2021 அன்று மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ் முதல்அமைச்சருக்கு

தலையங்கம்
தினத்தந்தி
5.8.2023 (ஞாயிற்றுக்கிழமை)
தகைசால் தமிழர்!

ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தார். அதில், "சாதனை செய்து சரித்திரத்தில் இடம் பெற்ற மாபெரும் மனிதர்களுக்கு ஆண்டுதோறும் ஒன்றிய அரசாங்கம் 'பாரத ரத்னா' மற்றும் 'பத்ம விருது' களை வழங்குவதுபோல, தமிழ்நாட்டிலும் நாட்டுக்கும், இனத்துக்கும் மாபெரும் பங்காற்றியவரை பெருமைப்படுத்தும் வகையில், சுதந்திர தினத்தன்று ஒரு விருதை முதல்அமைச்சர் வழங்கினால் சிறப்பாக இருக்கும்" என்று கோரியிருந்தார்.

அவரது கோரிக்கையை தமிழக அரசு மின்னல் வேகத்தில் பரிசீலனை செய்து, ஓர் உத்தரவை பிறப்பித்தது. பீட்டர் அல்போன்ஸ் கோரிக்கை மனுவை ஜூலை 18ந்தேதி அனுப்பியிருந்தார். 26ந்தேதி அரசு பிறப்பித்து இருந்த உத்தரவில், "தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்துக்கும் பங்காற்றிய மாமனிதருக்கு ஆண்டுதோறும் 'தகைசால் தமிழர்' என்ற பெயரில் ஒரு விருது வழங்கப்படும்.

இந்த விருதுபெறும் விருதாளருக்கு ரூ.10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழ், ஆண்டுதோறும் சுதந்திர தின விழாவில் முதல் அமைச்சரால் வழங்கப்படும். இந்த விருதுக்கான விருதாளரை தேர்ந்தெடுக்க முதல் அமைச்சர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும்" என்று கூறப்பட்டிருந்தது.

அடுத்த சில நாட்களில் இந்த குழு கூடி, 2021ம் ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருதுக்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான 100 வயதைக் கடந்த என்.சங்கரய்யாவை தேர்ந்தெடுத்தது. இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, பல்வேறு தியாகங்களை செய்த என்.சங்கரய்யா வீட்டுக்கே முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்று இந்த விருதை வழங்கினார். 'தகைசால் தமிழர்' விருதுடன் வழங்கப்பட்ட ரூ.10 லட்சத்தை என்.சங்கரய்யா கொரோனா நிவாரண பணிகளுக்காக, முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அப்போதே வழங்கி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

கடந்த ஆண்டுக்கான விருதாளராக, விடுதலை போராட்ட வீரராகவும், ஏழை, எளிய மக்களுக்காக குரல் கொடுத்து, சமூக நல்லிணக்கத்துக்காகவும், சுற்றுசூழலுக்காகவும் பாடுபட்டு வரும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணுவுக்கு இந்த விருதையும், பரிசு தொகையையும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். மிகவும் மகிழ்வுடன் விருதைப் பெற்றுக்கொண்ட 97 வயதான ஆர்.நல்லகண்ணு அந்த ரூ.10 லட்சத்துடன் மேலும் ரூ.5 ஆயிரத்தை சேர்த்து முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கி, தன் தன்னலமற்ற சேவையை வெளிக்காட்டினார்.

இந்த ஆண்டுக்கான 'தகைசால் தமிழர்' விருது, திராவிடர் கழக தலைவரான 90 வயது கி.வீரமணிக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இளம் வயது முதல் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, சமூக பாகுபாட்டுக்கு ஆளான மக்களுக்கு ஆதரவாக, தந்தை பெரியார் நடத்திய சமூக பிரச்சாரங்கள் மற்றும் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு, 40 முறை சிறைவாசம் அனுபவித்தவரும், 60 ஆண்டுகளாக 'விடுதலை' ஆசிரியராக பணியாற்றி, இன்றும் தொய்வில்லாமல் சமுதாயப் பணியை ஆற்றிவருபவருமான கி.வீரமணி இந்த விருதுக்கு மிகவும் பொருத்தமானவர். இந்த விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 தலைவர்களுமே தமிழகத்தின் நன் முத்துக்கள்.

இவ்வாறு 'தினத்தந்தி' தனது தலையங்கத்தில் முதல் வருக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு பேரணி!

பெரம்பூர் வடக்கு பகுதி கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 6-

முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி திராவிட மாடல் அரசின் முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் 5-ஆம் ஆண்டு நினைவுப் பேரணி நாளை (7.8.2023, திங்கட்கிழமை) காலை நடைபெற உள்ளது.

இதில் பெரம்பூர் வடக்குப் பகுதி கழகத்தினர் திரளாக கலந்து கொள்ளுமாறு பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள் விடுத்து ள்ளார். அவரது வேண்டுகோள் வருமாறு:-

14 வயதில் தமிழ் கொடியேந்தி தமிழ் வாழ்க என முழக்கமிட்டு பொது வாழ்வை துவக்கியவர் முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்கள். தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சர், திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர், அகில இந்திய அரசியலின் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்தவர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் அமைதிப் பேரணி 782023 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கலைஞர் சிலை அருகில் இருந்து புறப்பட்டு கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்.

பெரம்பூர் வடக்கு பகுதிக் குட்பட்ட மாநில நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட & பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பொதுமக்கள் கூடும் இடங்களில் நிர்வாகிகளின் இல்லங்கள் முன்பும் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்தை வைத்து மாலை அணிவித்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அ.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்
ஆகஸ்ட் 6 (2019)

தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

"தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, ஆக.6

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் எதிர்வரும் 6.8.2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி அளவில் மாவட்ட கழக அவைதலைவர் கே.போஜன் அவர்கள் தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமசந்திரன் அவர்கள் முன்னிலையில் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர -ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

5.8.2023 அன்று காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்ட முடிவுகள் குறித்து.

பொருள்: 1. கழகதலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் 5.8.2023 அன்று காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்ட முடிவுகள் குறித்து.

2. ஆகஸ்டு7, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, மாவட்டம் முழுவதும் தலைவர் கலைஞரின் திருவுருவ படங்களுக்கு மலர் அஞ்சலி செலுத்துவது குறித்து.

3. நீலகிரி மாவட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்